**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 27/2023**

**வாதி தரப்பு சாட்சி–2 மணி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 25.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | கிராமம் | |
| த/பெ / க/பெ. | ராக்கியப்பன் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 65 |

**முதல் விசாரணை**

1) நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனக்கு இவ்வழக்கில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது ஊர் டி.மேலப்பட்டி ஆகும். எனக்கு அதுதான் சொந்த ஊர். வாதி, பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியும். அவர்களின் நிலங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். இருவர் நிலங்களும் அருகருகே உள்ளதா, தூரமாக உள்ளதா என்றால் அருகருகே உள்ளது. அண்ணாதுரை நிலம் எந்த திசையில் உள்ளது என்றால் பாதைக்கு கிழக்குப்புறம் உள்ளது. அண்ணாதுரை நிலத்திற்கு கிழக்குப்புறம் யாருடைய நிலம் உள்ளது என்றால் அரசப்பன் நிலம் உள்ளது. தென்புறம் யாருடைய நிலம் என்றால் வாதி ராஜேந்திரன் நிலம் உள்ளது. வடபுறம் கிழமேல் ரோடு உள்ளது.

2) வாதி ராஜேந்திரன் நிலத்திற்கு கிழக்குப்புறம் யாருடைய நிலம் என்றால் அரசப்பன் நிலம் உள்ளது. ராஜேந்திரன் நிலத்திற்கு தென்புறம் ஒரு ரெட்டியார் நிலம் உள்ளது. அவர் பெயர் ஞாபகம் இல்லை. ராஜேந்திரன் நிலத்திற்கு மேற்கு பெரியசாமி நிலம் உள்ளது. அண்ணாதுரை நிலத்திற்கு மேற்குப்புறம் உள்ள பாதை எங்கே முடிகிறது என்றால் வாதிக்கு பாத்தியப்பட்ட பொது கிணற்றில்

முடிகிறது. மேற்படி பாதை எங்கே ஆரம்பிக்கிறது என்றால் கிழமேல் மெயின் ரோட்டிலிருந்து தொடங்குகிறது. வாதி ராஜேந்திரன் நிலத்திற்கு செல்லும் மேற்படி பாதையை தவிர வேறு பாதை உள்ளதா என்றால் பாதை இல்லை. ராஜேந்திரன் தனது விவசாய பொருட்களை நிலத்திற்கு எந்த பாதை வழியாக கொண்டு செல்கிறார் என்றால் மேற்படி தென்வடல் பாதை வழியாக தான் செல்வார்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்துக்கு அருகில் எனக்கு நிலம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் பற்றி முழு விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு முன்பு அவரது இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஒரு பூசாரி என்பவருக்கு பாத்தியப்பட்டது. பூசாரியிடமிருந்து அண்ணாதுரையின் மாமா பெரியசாமி வாங்கினார். பெரியசாமி அண்ணாதுரைக்கு எழுதி வைத்தார். நான் இருக்கும் இடத்திற்கும், தாவா சொத்து இடத்திற்கும் 2 கி.மீ இருக்கும். எனக்கும், அண்ணாதுரைக்கும் சமீபமாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். வாதி, பிரதிவாதி நிலங்களின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அண்ணாதுரை நிலத்திற்கு மேற்கே பெரியசாமி வாங்கியுள்ள 12-1/2 பாதை தான் ராஜேந்திரன் கிணறு வரை செல்கிறதா என்றால் செல்கிறது. ஆனால் அந்த பாதை ராஜேந்திரனுக்கு சொந்தமானது. பாதைக்கு மேற்கே தான் பெரியசாமி நிலம் உள்ளது.

மேற்படி பாதை வழியாகதான் ராஜேந்திரன் சென்று வருகிறாரா என்றால் சரிதான். அதே பாதையில் தான் பெரியசாமியும் சென்று வருகிறாரா என்றால் சரிதான். தாவா சொத்தின் முழு விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எப்போதாவது அந்த வழியாக சென்றுள்ளேனா என்றால் அந்த வழியாக தான் விவசாய வேலைகளுக்கு சென்று வருகிறேன். அண்ணாதுரையின் நிலம்

தற்போது விவசாயம் ஏதுவும் செய்யாமல் முட்கள் வைத்து மேட்டு நிலமாக உள்ளது என்றால் சரிதான். எனக்கு பிரதிவாதி மீதுள்ள முன் விரோதம் காரணமாக வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 27/2023**

**வாதி தரப்பு சாட்சி–3 பிரபாகரன் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 25.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபாகரன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | நாகராஜன் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 57 |

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனக்கு இவ்வழக்கில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. **அது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

2) நான் தற்போது குளித்தலையில் வசித்து வருகிறேன். நான் எந்த கிராமத்தில் பிறந்தேன் என்றால் தாவா சொத்து உள்ள தளிஞ்சி கிராமத்தில் புரசாம்பட்டியில் பிறந்தேன். வாதி, பிரதிவாதியை தெரியும். எனது ஊருக்கும், அவர்களது ஊருக்கும் 2 கி.மீ ஆகும். வாதி வசிக்கும் ஊரில் எனக்கு நிலங்கள் உள்ளதா என்றால் உள்ளது. எனது தாத்தா இடம் அந்த ஊரில் உள்ளதா என்றால் இருந்தது. எனது நிலம் வாதி, பிரதிவாதி நிலத்திற்கு அருகில் இருந்ததா என்றால் ஆமாம். வாதி பிரதிவாதி நிலங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அண்ணாதுரை இடத்திற்கு வடபுறம் யாருடைய நிலம் உள்ளது என்றால் கிழமேல் மெயின் ரோடு உள்ளது. அண்ணாதுரை இடத்திற்கு மேற்குப்புறம் பெரியசாமி நிலம் உள்ளது. பெரியசாமி நிலத்திற்கும் அண்ணாதுரை இடத்திற்கும் நடுவில் ஏதாவது உள்ளதா என்றால் பாதை உள்ளது.

3) அண்ணாதுரை இடத்திற்கு தெற்குப்புறம் வாதியின் தகப்பனார் தங்கராஜ்

நிலம் உள்ளது. அண்ணடாதுரை இடத்திற்கு கிழக்குப்புறம் யாருடைய நிலம் என தெரியவில்லை. வாதியின் இடத்திற்கு செல்ல அண்ணாதுரை இடத்திற்கு மேற்குப்புறம் உள்ள தென்வடல் பாதை வழியாகதான் செல்லமுடியும் என்றால் சரிதான். எனது தாத்தா இடம் எங்கு உள்ளது என்றால் வாதியின் நிலத்திற்கு தெற்குப்புறம் உள்ளது. வாதியின் இடத்திற்கு செல்ல தென்வடல் பாதையை தவிர வேறு பாதை உள்ளதா என்றால் இல்லை.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனது தாத்தாவின் நிலம் தற்போது உள்ளதா என்றால் இல்லை. 30 வருடங்களுக்கு முன்பு விற்றுவிட்டார்கள். எனது ஊர் தளிஞ்சி கிராமத்திற்கு 3 கி.மீ. தூரம் இருக்குமா என்றால் 2 கி.மீ. இருக்கும். எனக்கு தாவா சொத்தின் அருகில் உள்ள நிலத்தின் சர்வே எண்.154 ஆகும். அது எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் 10 ஏக்கர் தள்ளி இருக்கும். எனது நிலத்தின் நான்கெல்லை விபரம் தெரியுமா என்றால் திருச்சி – கரூர் மெயின் ரோட்டிற்கு தெற்கு, வாரிக்கு கிழக்கு, ராமசாமி ரெட்டியார் நிலத்திற்கு வடக்கு, ராஜேந்திரன் நிலத்திற்கு மேற்கு ஆகும்.

2) பொதுவாக வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் தான் ஆவணங்கள் எழுதுவார்கள் என்றால் சரிதான். பொதுவாக வருவாய்த்துறை ஆவணங்களில் இல்லாத ஒன்றை ஆவணங்களில் எழுதினால் அது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புல வரைபடத்தில் பாதை அமைப்பு உள்ளதா என்றால் இல்லை. வாதி, பிரதிவாதி இருந்த பிரச்சனை குறித்து பஞ்சாயத்து பேசினமா என்றால் இருந்த பாதையை அழித்து விட்டார் அதற்காக பாதை வேண்டுமென பேசினோம். பிரதிவாதியின் நிலம் ஆரம்பத்தில் யாரிடம் இருந்தது என்றால் பூசாரி என்பவரிடம் இருந்தது. அவரிடம் இருந்து பெரியசாமி கிரையம் வாங்கினார். அப்போது பாதை குறித்து எதுவும் கேட்கவில்லை என்றால் பாதை பயன்படுத்திக் கொண்டு இருந்ததால் பாதை

பற்றி கேட்கவில்லை.

3) அண்ணாதுரை நிலத்தை ஒட்டி மேற்குப்புறம் பாதை உள்ளதா என்றால் 12 அடி பாதை உள்ளது. அது தென்வடலாக சென்று வாதி ராஜேந்திரன் நிலத்தில் முடிகிறது என்றால் சரிதான். மேற்படி பாதை இல்லாமல் அதிகப்படியான பாதை வேண்டுமென கேட்டுதான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதற்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது அண்ணாதுரை நிலத்தில் பாதை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**